பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர் 19 புரட்டாசி 20 ஷவ்வா 22 இதழ் 236

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 6-10-77

## கடத்தப்பட்ட ப. நோ. கூ. ச. லொறி செம்மணியில் மீட்பு!

யாழ்ப்பாணம், வியாழன்

இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்ட ப.நோ.கூ.சங்க லொறி ஒன்று அநாதரவாக செம்மணியில் கிடக்க காணப்பட்டதாம்.

நேற்று முன்தினம் பகல் யாழ்ப்பாண மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான மேற்படி லொறி பொருள் கொள்வனவு ஒன்றிற்காக செம்மணியில் நிறுத்தப்பட்டிருந்ததாகவும் சாரதியும் கிளினரும் லொறியின் அருகே இல்லாத சமயம், லொறி இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டதாகவும் பொலிசாருக்குப் புகார் செய்யப்பட்டிருந்தது.

தேடுதல் நடத்திய பொலிசார் செம்மணியில் கடத்தப்பட்ட லொறியை கடத்திய இடத்திலிருந்து சிறிது தூரத்திற்கப்பால் நேற்றுமுன்தினம் நள்ளிரவு அநாதரவான நிலை கண்டு பிடித்தனர்.

விசாரணை தொடர்கிறது.

(கா-இ)

# இந்திரா விடுதலை அப்பீல் மனு மீண்டும் அரசிடம் கையளிப்பு!

## சட்ட நுணுக்கங்கள் குறித்து நீதிமன்றத்தில் ஆட்சேபம்

புதுடில்லி, அக். 5

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி விடுதலை செய்யப்பட்டதை [illegible] சேபித்து டில்லி உயர் நீதிமன்றத்தில் அரசு தாக்கல் செய்திருந்த அப்பீல் மனுவை உயர் நீதிமன்றம் அரசிடம் திருப்பிக் கொடுத்துள்ளது.

இந்த மனுவில் சில தவறுகள் இருப்பதே இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது

சட்ட நுணுக்கங்கள் தொடர்பாக தேவையான சில மாற்றங்கள் செய்த பின்னர் இந்தமனு நாளை வியாழக்கிழமை மீண்டும் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நாளையே விசாரணை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மனுமீது உயர்நீதிமன்ற பதிவுப் பிரிவில் [illegible] நுணுக்கங்கள் சம்பந்தமாக எழுந்த ஆட்சேபனைகள் நீக்கப்பட்டுவிட்டன என்றும் நாளை இம்மனு மீதான விசாரணை நடைபெறும் என்றும் அரசு தரப்பு வழக்கறிஞர் [illegible] தெரி[illegible] (இ)

## முன்னாள் எம்.பி. வீட்டில் 15 துப்பாக்கிகள் மீட்பு!

கொழும்பு, புதன்

கடந்தபொதுத் தேர்தலின் பின்முன்னாள் எம். பி. ஒருவரின் வீட்டிலிருந்து 15 துவக்குகள் மீட்கப்பட்டன என்று திரு. ஆர். பிரேமதாசா இன்று தேசியஅரசுப் பேரவையில் தெரிவித்தார். பேரவையில் திரு. பிரேமதாசா சமர்ப்பித்திருந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேலை இழந்தவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு?

யாழ்ப்பாணம், வியா.

வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆள்புல சிவில் பொறியியல் ஸ்தாபன அமைய ஊழியர்களுக்கு மீண்டும் வேலைகள் வழங்கப்படும் என நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சர் உறுதியளித்துள்ளார் என்று தெரிகின்றது

நீர்ப்பாசனமின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சின்கீழுள்ள ஆள்புல சிவில் பொறியியல் ஸ்தாபன அமைய ஊழியர்களது வேலைநீக்கம் சம்பந்தமாக நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. காமினி திஸநாயக்காவுடன் சிவில் பொறியியல் ஸ்தாபன தொழிற்சங்கப் பொதுச்செயலாளர் செ.விஜயரட்ணம், உபதலைவர் ஜி. ரணசிறி ஆகியோர் அடங்கிய குழு நடாத்திய பேச்சுவார்த்தையின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு உறுதியளித்ததாகத் தெரிகின்றது.

அமைய ஊழியர்களது எதிர்காலம்பற்றி ஆராய்வதற்காக எதிர்வரும் 16ம திகதி ஞாயிற்றுக்கிழமை வவனியாவில்நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு சகல சிவில் பொறியியலாளர் ஸ்தாபன டிப்போக்களில் கடமை புரிவோர்களை மேற்படி சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ். விஜயரட்னம் கேட்டிருக்கிறார்.

(கா)

## 71 ஏப்ரல்கிளர்ச்சி விசாரணை மீண்டும் நடைபெறும்

### பேரவையில் பிரேமதாசா

கொழும்பு, புதன்

1971-ம் ஆண்டு ஏப்ரல் கிளர்ச்சி தொடர்பாக மீண்டும் முழு விசாரணை ஒன்று நடைபெறும் என்று சபை முதல்வரும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா தேசிய அரசுப் பேரவையில் தெரிவித்தார்.

1971 ம் ஆண்டுக் கிளர்ச்சி நடவடிக்கைகள் தொடர்பாக சிறைவைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையிலேயே திரு. பிரேமதாசா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சியின் அரசு ஒன்றைஆட்சி பீடத்தில் அமர்த்தும் முயற்சிக்காக 1971 ம் ஆண்டு இளைஞர்கள் பயன்படுத்தப்பட்டார்கள் இதுபோன்று இளைஞர்கள் தவறான வழியில் இட்டுச்செல்லும் நிலை இனிமேல் என்றுமே ஏற்படமாட்டாது. (இ)

### யாழ். - மட்டுநகர் பஸ்ஸில்

## காவலுக்கு வந்த இராணுவ வீரர் அட்டகாசம்

யாழ்ப்பாணம், வியாழன்

மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம்வந்த இ.போ.ச. பஸ்ஸில் காவலுக்கு வந்த இராணுவத்தினருக்கும் பிரயாணிகளுக்கும் இடையே இடம்பெற்ற வாக்குவாதத்தை அடுத்து இளம் பெண்கள் உட்பட சிலபிரயாணிகள் தமது பிரயாணத்தை இடையில் நிறுத்திக்கொண்டதாகவும் சிலர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாகவும் வவுனியா பஸ் டிப்போவில் புகார் செய்யப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்த மட்டக்களப்பு டிப்போ பஸ் ஹபரணைக்கு அருகே வந்துகொண்டிருந்த போது பஸ்ஸில் காவலுக்கு வந்த இரு இராணுவ வீரர்களும் இளம்பெண்களைக் கேலிசெய்து அவர்களுக்கு அருகே இருந்து சேஷ்டைசெய்ய முற்பட்டதாகவும் இச்செயலைத் தட்டிக் கேட்ட இரு வாலிபர்களை இராணுவத்தினர் அடித்துக் காயப்படுத்தியதாகவும் அப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி பிரயாணிகள் நடத்துநரிடம் முறையிட்டபோது இராணுவத்தினர் நடத்துநரையும், சாரதியையும் கொலை செய்யப் போவதாக பயமுறுத்தியதாகவும் அறியப்படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து இரு பெண்கள் உட்பட யாழ். வந்த சில பிரயாணிகள் வவுனியாவில் தமது பயணத்தை இடைநிறுத்தி இறங்கிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மாலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணம் வரவேண்டிய குறிப்பிட்ட பஸ் இரவு 8-15-க்கே வந்து சேர்ந்தது.

இதுபற்றி விசாரணை நடத்துமாறு வவுனியா டிப்போ அதிபர் மட்டக்களப்பு டிப்போ அதிபரைக் கேட்டுள்ளார்.

வவுனியா, யாழ்ப்பாணம் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களுக்கும் இதுபற்றிப் புகார் செய்யப்பட்டுள்ளது.

[ஆனை-நிரு]

## வல்லையில் வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், வியாழன்

வல்லை இலங்கை நூற்றல் நெய்தல்ஆலையின் சகல தொழிலாளர்களும் நேற்று முதல் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

வேலை ஒப்பந்தக் கடிதம் சம்பள உயர்வு, தரப்படுத்தல் முதலிய கோரிக்கைகளை முன் வைத்தே இவ் வேலை நிறுத்தம் நடைபெறுகின்றது

இன்று காலை யாழ் தொழில் கந்தோரில் இது தொடர்பான மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

(கெ-இ)

## தபால் நிலையங்களிலும் நிலையான சேமிப்புக்கணக்கு

கொழும்பு, புதன்

நிலையான சேமிப்பு வைப்புக் கணக்குகளை இனிமேல் தபால் நிலையங்களிலும் ஆரம்பிக்கலாம் என்று தேசிய சேமிப்பு வங்கி அறிவித்துள்ளது.

இன்று முதல் இந்நடைமுறை அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

நாடு முழுவதிலும் உள்ள 322 தபால் கந்தோர்களிலும் பொது மக்கள் இச்சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களில் தேசிய சேமிப்பு வங்கியின் 20 கிளைகளிலும் 22 கோடியே 10 லட்சம் ரூபா நிலையான வைப்புக் கணக்கில் இடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## இலங்கைக்கு ஜேர்மன் உதவி

கொழும்பு, புதன்

ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு இலங்கைக்கு ஒரு கோடி மார்க் உதவி வழங்க உள்ளது.

இதற்கான ஒப்பந்தம் ஒன்று இன்று கொழும்பில் இரு நாட்டு அதிகாரிகளுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டது. (இ)

## வெளிநாடு செல்கிறார்

(காலி)

காலி அரசாங்க அதிபர் திரு. ச. சிவானந்தன் நெதர்லாந்துக்கு புலமைப் பரிசில் பெற்று செல்கிறார். இவர் ஏழுமாதங்கள் அங்கு இப்பயிற்சி நெறியில் ஈடுபடுவாரெனத் தெரிகிறது.

இவரின் சேவையைப் பாராட்டும் முகமாக பல பிரிவுபசார வைபவங்கள் காலியில் நடாத்தப் பட்டுள்ளன. (இ)

# சைக்கிளில் இருவர் செல்ல ஆணையாளர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், வியா

யாழ் நகரில் சைக்கிளில் இருவர் செல்வதை அனுமதிக்க மாநகரசபை விசேட ஆணையாளர் திரு க. சிவஞானம் பொலிஸ் அதிபருடனும் ஏனைய அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களின் நன்மை கருதியே இந்நடவடிக்கை எடுப்பதாகவும் ஆணையாளர் கூறியுள்ளார்.

போக்குவரத்து வசதிகளை முன்னிட்டு ஒரு வழிப்பாதையால் செல்வதையும், இரு சைக்கிள்கள் பக்கம் பக்கமாகச் செல்வதையும் தடுக்க கடும் நடவடிக்கை எடுக்குமாறும், ஆணையாளர் பொலிஸ் அதிபரைக் கேட்டுள்ளார்.

இச்சட்டங்கள் சில தினங்களில் அமுலாக்கப்படுமென்று திரு. சிவஞானம் தெரிவித்துள்ளார். (கு)

# கொள்ளைக் கோஷ்டி காட்டில் அகப்பட்டது!

மாங்குளம், புதன்

துப்பாக்கு, கிறிஸ் போன்ற பயங்கர ஆயுதங்களுடன் முகமூடியணிந்து புளியங்குளம் பகுதியில் கொலை, கொள்ளை, தீவைப்பு, கற்பழிப்பு ஆகிய முயற்சிகளில் ஈடுபட்டதாக சந்தேகிக்கும் கொள்ளைக் கோஷ்டி ஒன்றை மாங்குளம் பொலிசார் வளைத்துப் பிடித்துள்ளனர்.

புளியங்குளம் காட்டுப்பகுதியில் இவர்களது நடமாட்டம் இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து மாங்குளம் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பீற்றரீஸ் பெரேரா, தனபாக்கியம், சங்கரலிங்கம், பாலசிங்கம், செல்வசேகரம், விஜயபாலா ஆகிய பொலிஸ் கோஷ்டியினர் இவர்களை மடக்கிப்பிடித்தனர். (கெ-இ)

# சிறிமா சமர்ப்பித்த அறிக்கை: 'பிரேமா' உரிமைப் பிரச்னை!

கொழும்பு, புதன்

தேசிய அரசுப் பேரவையில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நேற்று அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தபோது இந்த அறிக்கை கடந்த 2-ம் திகதி 'வீக் என்ட்' பத்திரிகையில் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் பெயரில் வெளியிடப்பட்டிருந்தது என்றுதெரிவித்திருந்த திரு. ஆர். பிரேமதாசா உரிமைப் பிரச்னை ஒன்றைக் கிளப்பினர்.

அரசியல் அமைப்பு திருத்தம் பற்றிய சுதந்திரக்கட்சியின் கொள்கையே இந்த அறிக்கை என்றும் இந்த அறிக்கையை கட்சியின் காரியதரிசி திரு. சூரியாராச்சி தயாரித்திருந்தாரென்றும் திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார்

இந்த அறிக்கையை பீலிக்ஸ் கையாடினரா அல்லது திருமதி பண்டாரநாயக்கா கையாடினரா? என்று தெரியவில்லை என்று திரு. பிரேமதாசா கூறியபோது, சபாநாயகர் இது கட்சியின் உட்பூசல்கள் என்று தெரிவித்தார்.

அப்போது சபையில் சிறிது நேரம் கலகலப்புக்காணப்பட்டது.

இதை அடுத்து திருமதி பண்டாரநாயக்கா தமது அறிக்கையைத் தொடர்ந்து வாசித்தார்.

## சாத்தான் இன்றும் இயங்குகிறதா?

இந்த விவாதத்தில் வேறு ஒரு கட்டத்தில் பேசிய திரு. காமினி திசநாயக்கா, "கடந்த 7 வருடங்களாக பேரவையில் இயங்கிவந்த 'சாத்தான்' இன்று வெளியில் இருந்து இயங்குகிறதா?" என்று சிரிப்புக்கு மத்தியில் கூறினர். (ம-இ)

# "அரசியல் அமைப்பு முற்றாக திருத்தப்படவேண்டும்"

— எஸ். தொண்டமான

கொழும்பு, புதன்

"168 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய அரசுப் பேரவையில் 10 லட்சம் தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே ஒரு உறுப்பினராக நான் இப்பேரவையில் இருக்கிறேன் அதுவும் 3-வது எம். பி.யாகவே இருக்கிறேன். 72ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்த அரசியல் அமைப்பு முற்றாகத் திருத்தப்படவேண்டும் எனவே இத்திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன்"

இவ்வாறு நுவரெலியா-மஸ்கெலியா மூன்றாவது உறுப்பினர் திரு எஸ். தொண்டமான் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"சோல்பரி அரசியல் அமைப்புக்கும் 72ம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்புக்கும் அதிகவித்தியாசம் இல்லை. 72ம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பு தமிழ்மக்களை இரண்டாந்தர பிரஜைகள் ஆக்கிவிட்டது. (ம-இ)

## "பலாத்காரம்"

'தமிழ்ப்பணிமனை' யினரின் வெளியீடான 'சுதாராஜ்' எழுதிய 'பலாத்காரம்' சிறுகதைத் தொகுப்பு வரப்பெற்றோம்.

யாழ். கலாநிலையப் பதிப்பகத்தில் அச்சிடப் பெற்றுள்ள இந்நூலில் 'சுதாராஜ்' எழுதிய 10 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. சிறுகதை நூல்களின் வரிசையில் சிறப்பு இடம்பெறக்கூடிய முறையில் இதன் அமைப்பும் முகப்பும் விளங்குகின்றன.

ஒவ்வொரு கதைக்கும் ஒரு படம் எனக் கதைக்கு ஏற்ற முறையில் தலைப்புடன் அழகிய கலரில் படங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலையில் தொழில்நுட்ப வல்லுனராக இருந்து வரும் திரு. சி. இராஜசிங்கம் (சுதாராஜ்) இக்கதைகளை எழுதியுள்ளார்.

அழகான அமைப்புடன் தெளிவான அச்சில் பதிப்பிக்கப்பட்டு மூவர்ண அட்டையுடன் கூடிய இச்சிறுகதைத் தொகுதிக்கு நல்ல வரவேற்பு இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

—பெ.

## நூறு பேருக்கு ரூ.50 வீதம் வழங்கினர்

அரியாலை, வியாழன்

வட இலங்கையில் பாதிக்கப்பட்ட நூறு சிங்கள மக்களுக்கு ஒருவருக்கு ஐம்பது ரூபா வீதம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. அகஸ்ரினும் சமூக சேவை உதவி அதிபர் திரு. கெங்காதரனும் மேற்படி நிதித் தொகைகளை பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரில் வழங்கினர்கள். (அ)

1973-ம் ஆண்டின் 44-ம் இலக்க நீதி நிருவாகச்சட்டத்தின் 283-ம் பிரிவின் கீழ் மரணசாதனம் நிருபிக்கப்பட்டு அதிகாரப்பத்திரம் வழங்கப்படுவது பற்றிய

## இடைக்காலக் கட்டளை

### இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி, றக்கா ஒழுங்கை இல. 3 முத்துத்தம்பி வீரசிங்கத்தின் மரணசாதனம் விடயமாக

திருமதி பிறீடா மகிழ்மலர் வீரசிங்கம் இல. 3, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

விண்ணப்பகாரர்

வலயம்: யாழ்ப்பாணம்.

இல: 393

மற்றும்

1. நோயல் லக்ஷ்மணன் பற்குணராஜ் வீரசிங்கம், 3, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
2. மைக்கேல் மஞ்சுகரன் வீரசிங்கம் தற்போது 63, பிரேக்ஸ்பியஸ் வீதி, லண்டன், தெ. இ. 4.
3. கிறிஸ்ரோபர் செல்வச்சந்திரன் வீரசிங்கம்.
4. டொக்டர் ஆறுமுகம்எட்வின் இராஜராஜனும் பெண்.
5. கிறிஸ்ரின் சகுந்தலா இராஜராஜன் எல்லோரும் 3, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

எதிர்வாதிகள்

1977-ம் ஆண்டு ஆவணி மாதம் 12-ந் திகதியிடப்பட்ட விண்ணப்பத்தின் முக்கிய கூற்றுக்கள் பரிசீத்த மாத்திரத்தில் நிருபிக்கப்பட்டதெனத் திருப்தியடைந்ததின் பேரில் யாழ்ப்பாண நீதி நிருவாக வலயத் தத்துவப் பத்திர அதிகாரியாகிய கா. கணபதிப்பிள்ளையாகிய நான் அக்கட்டளையின் அறிவித்தலைப் பெறும் எவராவது அல்லது இந்நடவடிக்கையில் அக்கறையுள்ள எவராவது 1977-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30-ந் திகதியன்று அல்லது இதற்கு முன்னர் போதிய காரணம் காட்டி ஆட்சேபனை தெரிவித்தாலன்றி 1972-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 6-ந் திகதி பிரசித்த நொத்தாரிசு யாழ்ப்பாணம் ம. கதிரவேலுவால் 6087-ம் இலக்கத்தில் அத்தாட்சிப் படுத்தப்பட்டதும் இப்பொழுது இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டதுமான மரணசாதனம் நிருபிக்கப்பட்டதெனவும், மேலே சொல்லப்பட்ட விண்ணப்பகாரரே குறித்த மரணசாதனத்தில் சொல்லப்பட்ட நிறைவேற்றுனர் எனவும் மேற்படி மரணசாதனத்தின் மீதான மரணசாதன அதிகாரப்பத்திரம் சொல்லப்பட்ட விண்ணப்பகாரருக்கே முறைப்படி வழங்கப்படவேண்டுமென்றும் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் செயற்பட்டு இத்தால் கட்டளையிடுகிறேன். 1977-ம் ஆண்டு ஆவணி மாதம் 12-ந் திகதி.

(ஒப்பம்)

கா. கணபதிப்பிள்ளை

தத்துவப்பத்திர அதிகாரி,

7313

## 'பரீட்சையை ரத்துச் செய்க'

யாழ்ப்பாணம், வியா

நாட்டில் இடம்பெற்ற கலவரங்களினால் பெருந்தொகையான தமிழ் கணக்காய்வு ஊழியர்கள் பாதிப்படைந்து பரீட்சைக்கு தோற்றமுடியாமல் இருந்தபோது கடந்தமாதம் 30ந் திகதி கணக்காய்வு அத்தியட்சகர் பொதுப்பரீட்சையை நடாத்தியமை வேதனைக்குரியதாகும். எனவே தமிழ் கணக்காய்வு ஊழியரின் நலன்கருதி இப்பரீட்சையை ரத்துச்செய்யவும்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட தமிழ் கணக்காய்வு ஊழியர் கழக தலைவர் திரு. இரத்தினசபாபதி கணக்காய்வு அதிபதியை கோரியுள்ளார்.

பாதிக்கப்பட்ட கணக்காய்வு ஊழியர்களின் செப்டம்பர் மாத சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லையெனவும் மற்றையதுறை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. இரத்தினசபாபதி கணக்காய்வு அதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார். (கெ-இ)

## நாளை இலவச வைத்தியசேவை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். லயன்ஸ் கழகம் உலக சேவைத்தினத்தையொட்டி இம்மாதம் 7-ம் திகதி குருநகர்ப்பகுதியிலுள்ள நோயாளிகளுக்கு இலவச வைத்திய சேவையை வழங்குவர். கழகத்திலுள்ள டாக்டர்கள் அனைவரும் இச்சேவையில் பங்குகொள்ள உள்ளதாக லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

அன்றையதினம் இலங்கை கயரோக தடுப்புச்சபையின் யாழ். கிளையினர் கயரோக தடுப்பு மருந்துகளை குருநகர் பிள்ளைகளுக்கு வழங்கவுள்ளனர். இச்சேவையில் வேம்படி மகளிர் கல்லூரி உயர் மாணவிகள், கிறீஸ்தவ வாழ்வுச் சங்கம், மரியாயின்சேனை ஆகியோர் ஈடுபடவுள்ளனர். (கெ-அ)


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

க. பொ. த. (சாதாரண பரீட்சையில் விசேட திறமைச் சித்திகளைப் பெற வர்த்தகம் மாதிரி வினாவிடை விலை 5/25 தபால் செலவு ரூபா 1/- வெளியீடு: யாழ். சட்டநிலையம், பிரதானவீதி, யாழ்ப்பாணம். 7311

நல்ல நிலையிலுள்ள EY கில்மன் கார் விற்பனைக்குண்டு. இரண்டாவது சொந்தக்காரர் சாந்திமில், வட்டுக்கோட்டை. 7296

அக்கராயன் குளத்தில் 5 ஏக்கர் மேட்டு நிலமும், 10 ஏக்கர் நெல்வயலும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: வைத்தீசன்ஸ் 162, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 7766. 7293

### பயிற்சிகள்

வெளி நாடுகளில். வேலைகளுக்கு ஏற்ற வெல்டிங், இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transister) பயிற்சிகள் இப்போது நடைபெறுகின்றன. விரைவில் City and Guilds (Electrical) மோட்டார் மெக்கானிசம் (Amimi) ஆரம்பமாகும். P. M. G. Certificate (General & Special) இம்மாதம் 14ம் திகதி ஆரம்பமாகிறது. உடன் பதிவு செய்யவும். வெளியூர் மாணவர்களுக்கு தங்கும் வசதிகளுண்டு. மைற் மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 7307

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## கோட்டு விற்பனை விளம்பரம்

மல்லாக மாவட்ட நீதிமன்றம்

இல:ஈடு: 832

1. வைத்திய கலாநிதி திருமதி C. B. கங்கம்மா பி. யூ. எல். —வாதி

எதிராக

1. தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலை. —பிரதிவாதி

மல்லாகம் மாவட்டநீதிமன்றத்தின்832-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியையும் அதனுள் இருக்கும் வீட்டையும் 1977-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 4-ந் திகதி (4-11-77) வெள்ளிக்கிழமை 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி 81,852/- 14-8-75ம் ஆண்டு தொடக்கம் 30-9-76 வரைக்கும் 80,544/-க்கு 6% வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியாக வருடம் ஒன்றுக்கு 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 932-57 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று, தெல்லிப்பழை கிழக்கிறை "குளத்திற்புலம் காக்கைப் பதிராயன் சீமா" நெற்பரப்பு நூறில் (நெ. ப. 100) மிகுதியாக உள்ள காணியில் நிந்தமாக நெற்பரப்பு பதினறு (16) குளி ஆறு (6) தற்போது நிலப்பரப்பாகக் கொள்ளப்படும் நிலப்பரப்பு பதினொன்று (நில. ப 11) ம் அதற்குள்ளிருக்கும் வீடும், தெற்கே உள்ளதும் காங்கேசன்துறை வீதியிலிருந்து போவதுமான ரோட்டுப் பாதைப் பாவிப்புரித்தும். இந்த நில. பர. 11க்கு எல்லை கிழக்கு இலங்கைநாயகம் தம்பியின் உரிமைக்காரரின் காணி வடக்கு குறித்த தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலையின் காணி, தெற்கு நன்கொடை கொடுத்தவர்களின் காணியும் ரோட்டுப் பாதையும், மேற்கு நன்கொடை கொடுத்தவர்களின் காணி. இக்காணி நிலஅளவையாளர் ஆர். சி. லோறஞ்சிப்பிள்ளையால் தயாரிக்கப்பட்ட 1450ம் இலக்கப் படத்தில் 4A என்ற துண்டாகக் காட்டப்பட்டது. இதற்கு நன்கொடை கொடுக்கப்பட்ட பரப்பின் ஒரு பகுதியான 7ம் துண்டாகக் காட்டப்பட்டதும் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலிருந்து போவதுமான ரோட்டுப் பாதையில் உரித்து உண்டு.

மு. விஜயராசன்,

நீதிமன்ற விற்பனை விலைமதிப்பாணையாளர்.

கொக்குவில் மேற்கு,

கொக்குவில்,

7314

# கடத்தல்காரர்களை ஒப்படைக்குமாறு

# அல்ஜீரியாவுக்கு ஜப்பான் கோரிக்கை

டோக்கியோ, அக். 5

விமானக் கடத்தல்காரர்களையும் அவர்கள் வசமுள்ள அறுபதுலட்சம் டாலர் பணத்தையும் தங்களிடம் ஒப்படைக்குமாறு ஜப்பானிய அரசாங்கம் அல்ஜீரிய அரசாங்கத்தைக் கேட்டுள்ளது

ஜப்பானிய 'டிஸி-8' ஏர்லைனஸ் விமானத்தை (பிரயாணிகளுடன்) கடத்திய ஜப்பானிய செம்படையினர், தற்போது அல்ஜீரிய அரசாங்கத்தின் பாதுகாப்பில் இருக்கின்றனர்.

கடத்தல் விமானத்தை கடந்த திங்கட்கிழமை அல்ஜியர்ஸில் இறக்கிய கடத்தல்காரர்கள்; பிரயாணிகள் மற்றும், விமானச் சிப்பந்திகளை வெளியேற அனுமதித்து, அல்ஜீரிய அரசாங்க அதிகாரிளிடம்சரணடைந்தனர். இதனைத் தொடர்ந்து அல்ஜீரிய அரசுடன் ஜப்பானிய அரசு தொடர்பு கொண்டது.

நேற்று நடைபெற்ற ஜப்பானிய மந்திரிசபையின் அவசரக் கூட்டத்தின் பின்னர், கடத்தல் காரர்களான செம்படையினரையும், அவர்கள் கோரிக்கைமீது விடுதலைசெய்யப்பட்ட ஆறு கைதிகளையும், மற்றும் அறுபதுலட்சம் டாலர் பணத்தையும் தங்களிடம் ஒப்படைக்குமாறு அல்ஜீரிய அரசாங்கத்தை ஜப்பானிய அரசு கேட்டுள்ளது.

ஜப்பானின் கோரிக்கை குறித்து அல்ஜீரிய அரசு இன்று காலைவரை முடிவெடுக்கவில்லை

## ஒருநாள் சம்பளம் ஆசிரியர்கள் வழங்குவர்

யாழ்ப்பாணம், வியா

வடபகுதியிலுள்ள பாடசாலைகளைச்சேர்ந்த தமிழாசிரியர்கள் தமது ஒருநாள் சம்பளத்தை அகதிகள் புனர்வாழ்வுக்கு வழங்குவதென முடிவு செய்துள்ளதாகத்தெரிய வருகிறது. இம்மாதம் 14-ம், 15-ம் திகதிகளில் அகதிகள் புனர்வாழ்வுச் சபை நடத்தும் கொடித்தினத்தில் இவர்கள் தமது ஒருநாள் சம்பளத்தை வழங்குவர். நிதி சேகரிப்புப் படிவங்கள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. வன்செயல்களால் பாதிக்கப்பட்டு வடபகுதி முகாம்களில் இருக்கும் அகதிகளின் புனர்வாழ்வுக்கு இந்நிதி பயன்படுத்தப்படும். (கி-அ)

# ஈழத்தமிழர் உரிமைமுழக்கம்

## முரசொலியில் தொடர் கட்டுரை

சென்னை, அக். 5

"ஈழத்தமிழர் உரிமை முழக்கம்" என்னும் தலைப்பில் ஈழத்தமிழர்களின் சமீபத்திய வன்செயல் பாதிப்புக்கள் பற்றியும் ஈழத்தமிழரின் அரசியல் நிலைபற்றியும் தெளிவான தொடர் கட்டுரை ஒன்றை "முரசொலி" வெளியிடத் தொடங்கியுள்ளது.

இக்கட்டுரையை முரசொலி ஆசிரியரும் தி. மு. க. தலைவர்களில் ஒருவருமான முரசொலி மாறன் எழுதுகின்றார். இலங்கைப்படத்துடன் கூடிய தலைப்பைக் கொண்ட இக் கட்டுரைத் தொடரின் முதலாவது கட்டுரையில் சமீபத்திய வன்செயல்களின் போது தமிழர்கள் பாரதூரமான முறையில் உயிர், உடல் சேதங்களுக்கு ஆளான முறைபற்றி எழுதியுள்ள ஆசிரியர் அடுத்து தமிழர்களின் வரலாறுபற்றி எழுதத்தொடங்கியுள்ளார்.

இதில் விஜயன்கூட தமிழர்களுடன் நல்லுறவுபாராட்டியே அரசு வாழ்வைத் தொடங்கியதாகக்கூறும் ஆசிரியர், ராஜ ராஜ சோழன் போன்றோர் கட்சியைக் கைப்பற்றியதையும் எழுதியுள்ளார்.

இக்கட்டுரையில் ஒருகட்டத்தில் இலங்கையில் ராஜ ராஜ சோழன் திரைப்படம் வெற்றியீட்டியதையும் இந்தியாவில் தோல்வி கண்டதையும் குறிப்பிட்டுள்ளார். (கி)

## புதிய தலைவர்

யாழ்ப்பாணம். வியா

யாழ். வளாக விஞ்ஞான பீடத்தின் தலைவராகப் பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார் இவர் இங்கு உயிரியல் பேராசிரியராகக் கடைமையாற்றியவர். வட்டுக்கோட்டை வளாகப் பிரிவில் இவர் நேற்றுமுதல் பதவியேற்றுள்ளார். (கி-அ)

# இந்திரா காந்தியை கைது செய்ததில் அரசு மகிழ்வில்லை

— அமைச்சர் சரண்சிங்

புதுடில்லி, அக். 5

"இந்திராகாந்தியை கைது செய்ததில் அரசு எந்தவிதத்திலும் மகிழ்ச்சி அடையவில்லை. குற்றம் செய்தவர்கள் யாராயினும் தண்டனை பெற்றே தீரவேண்டும் சட்டத்தின் முன் யாரும் சமமே" என்று முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கைதுசெய்யப்பட்டது குறித்து இந்திய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசுகையில்தான் அமைச்சர் மேற்கண்டவாறு கருத்தை வெளியிட்டார்.

கேள்வியொன்றுக்கு அவர் பதிலளிக்கையில் திருமதி இந்திராகாந்தி தனது விருப்பத்திற்கு இணங்கவே அரசியல் அமைப்பைப் திருத்தினர். அதிகார துஷ்பிரயோகம் செய்தார். ஒரு லட்சத்துக்கு அதிகமான அரசாங்க ஊழியர்களை சிறையில் தள்ளினர், ஊழல் புரிந்தார். இத்தனை குற்றங்களுக்காகவே தான் அவர் கைதுசெய்யப்பட்டாரே தவிர, அரசியல் வஞ்சம் தீர்ப்பதற்காக அவர் கைதுசெய்யப்படவில்லை" என்றுர்.

திருமதி இந்திராகாந்தி மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணைசெய்த மத்திய புலனாய்வுத் துறையினர் பாரதூரமான குற்றங்களை திருமதி இந்திராகாந்தி புரிந்துள்ளார்? என்று முடிவுசெய்துள்ளது. இதனைத் தொடர்ந்தே அவர் கைதுசெய்யப்பட்டார்.

இப்போது புலனாய்வு நடத்தும் புலனாய்வுத்துறையினர், மேலும் பல குற்றச்சாட்டுக்களை நிருபிக்கவிருக்கின்றுர்கள். குற்றம் செய்திருந்தால் நிச்சயமாக தண்டனை அனுபவித்தே தீரவேண்டும் என்று அமைச்சர் திரு. சரண்சிங் தெரிவித்தார். (செ)

மகரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில்

# தமிழ் நோயாளர்கள் துன்புறுத்தப்படுகின்றனர்?

## யாழ். திரும்பிய நோயாளிபுகார்

யாழ்ப்பாணம், வியா

மகரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு வரும் தமிழ் நோயாளர்கள் அங்கு கடமையாற்றும் சிற்றூழியர்களால் துன்புறுத்தப் படுகின்றனர் என்று அங்கிருந்து துன்புறுத்தல்காரணமாக சிகிச்சை பெறுமல் யாழ்ப்பாணம் திரும்பியபெண்நோயாளி ஒருவர் புகார் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது மகரகம ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் சிற்றூழியர்களினால் இம்சிக்கப்பட்ட பல நோயாளிகள் யாழ்ப்பாணம் திரும்பியிருந்தனர்.

இவர்களுக்கு உணவு வழங்கும் சிங்கள ஊழியர்கள் உணவை வழங்காதுவிட்டது மன்றி அவர்களைத் துன்பப் படுத்தி வீட்டுக்குச் செல்லுமாறு கலைத்துவிட்டனராம்.

இந்த ஊழியர்களை மீண்டும் மகரகம ஆஸ்பத்திரிக்கு அனுப்ப ஏற்பாடு செய்த யாழ். லயன்ஸ் கழகம் கொழும்பு லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் அவர்களை அங்கு அனுப்பி வைத்தது.

இப்போது மீண்டும் அங்குள்ள சிங்கள சிற்றூழியர்கள் தமிழ் நோயாளிகளை துன்பப்டுத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த சனிக்கிழமை புற்று நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்த டாக்டர் ஆர். ராஜா குக்கிடம் மகரகமவில் துன்புறுத்தப்பட்ட நோயாளி, ஒருவர் புகார் செய்துள்ளார். (இ)

"அகதிகள்கொடித்தினநிதி:

# நிரந்தர தொழில் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும்"

-- வி. பொன்னம்பலம்

பண்டத்தரிப்பு, புதன்

"பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கென அளிக்கப்படும் நிதி உதவிகளைக் கொண்டு பாதிக்கப்பட்டுள்ள தமிழ்மக்களின் எதிர்கால வாழ்க்கை ஸ்திரமாக அமையும் பொருட்டு சிறுகைத் தொழில் திட்டங்களையும் வேறுபல வேலைவாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளோம். அகதிகளாகத் தங்கியிருக்கும் மக்களை அன்றுட உணவு உடைத் தேவைகளுக்காக இந்த நிதி பயன்படுத்தப்படமாட்டாது ஆகவே இம் மாதம் 14, 15ம் திகதிகளில் உங்கள் பகுதிகளில் நடைபெறவுள்ள கொடித் தினங்களில் இயன்ற உதவிகளை அளித்து ஆதரவற்ற இந்த மக்களின் துயர் களைய முன்வரவேண்டும்."

இவ்வாறு பண்டத்தரிப்பு மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வு பற்றிய ஆலோசனைக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய பாதிக்கப்பட்ட தமிழர்புனர் வாழ்வுச் சபையின் திட்டக் குழுச் செயலாளரும் கம்யூனிஸ்ட் பிரமுகருமான திரு வி. பொன்னம்பலம் குறிப்பிட்டார். முன்னாள் பண்டத்தரிப்பு ப.நோ. கூ. சங்கத் தலைவர் திரு எஸ். கந்தையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பண்டத்தரிப்புப் பட்டணசபை பண்டத்தரிப்புக்கிராமசபை ஆகிய பிரதேசங்களில் இம் மாதம் 14-ம் 15-ம் திகதிகளில் கொடித்தினம் நடாத்துவதென்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பண்டத்தரிப்பு மகளிர் வித்தியாலய அதிபர் திருமதி இ. ஆறுமுகதாஸன் பண்டத்தரிப்பு ப. நோ. கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் திரு. இ. இராஜசுந்தரம் ஆகியோர் உட்படப் பெருந்தொகையான பொது மக்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (அ)

லண்டனிலுள்ள

# அகதிகள் நிவாரணசபை லட்சம் பவுண் வழங்குகிறது

மாவிட்டபுரம், புதன்

லண்டனில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர் அகதிகள் நிவாரணசபை சுமார் ஒரு லட்சம் பவுணை அகதிகளுக்கு வழங்க இருக்கிறது.

அண்மையில் இலங்கையில் நடந்த கலவரத்தினுல் அகதிகளான தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக லண்டனில் டாக்டர் ஆறுமுகம் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர் பதவிகள் வகிப்போர் உட்பட பல பிரமுகர்கள் அங்கம் வகிக்கும் அகதிகள் நிவாரணசபை ஆரம்பிக்கப்பட்டு 6 மாதத்தினுள் 1,00,000 பவுணைச் சேகரித்து அகதிகள் நல்வாழ்வுக்கு உபயோகிப்பதற்காக வழங்குவதென முடிவு செய்து அதற்கான நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இத்தகவலை தமிழர்விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும், அண்மையில் வெளிநாடு சென்று திரும்பியவருமான வழக்கறிஞர் திரு அ. குமரகுரு கூறினர்.

அகதிகள் நிவாரண சபையை உருவாக்குவதில் தாம் பெரிதும் ஈடுபட்டுழைத்ததாகக் கூறிய அவர், ஈழத் தமிழர் பிரச்னைகள்பற்றி வெளிநாடுகளிலுள்ள பல சர்வதேச நிறுவனங்களுடன் தாம் தொடர்பு கொண்டதாகவும் கூறினர்.

ஜெனிவா, ஐ. நா. பாதுகாப்புச் சபை பாதுகாப்புச் சட்டத்துறைத் தலைவர் டாக்டர் சீசர் என்பவருடன் தாம் இலங்கைத் தமிழர் பிரச்னை, சைப்பிரஸ் பிரச்னை போன்றதால் ஐ. நா. சபை இதில் தலையிடவேண்டுமெனக் கேட்ட போது, சைப்பிரசில் கிரேக்கருக்கும் துருக்கியருக்கும் நெடுநாளைக்குமோதிஅமைதியின்மை நீடித்துவந்ததால் ஐ. நா. சபை தலையிட்டதாகவும் இலங்கையிலும் அப்படியொரு நிலை உருவானுல் ஐ. நா. சபை தலையிடும் என்று கூறி ஈழத்தமிழர் பிரச்னை குறித்து ஐ. நா. சபையில் அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதாகக் கூறியதாகவும் திரு. குமரகுரு தெரிவித்தார்.

இதுமட்டுமன்றி வெளிநாடுகளிலுள்ள கஷ்ட நிவாரண சங்கங்கள், சர்வதேச நிறுவனங்கள், பிரமுகர்களுடன் இதுபற்றி கலந்துரையாடி எமது பிரச்னைகளை எடுத்துக் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

## அனுதாபம்

கொழும்பு, புதன்

தேசிய அரசுப்பேரவையில் நேற்று காலஞ் சென்ற கடற்றொழில் அமைச்சர் திரு. எஸ். டி. எஸ் ஜெயசிங்காவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. (ம-இ)

## இனந்தெரியாத நபர் மரண விசாரணை:

# 'பொலிஸ்உடை அணிந்தவர் சுட்டதைக் கண்டேன்',

### நீதவான் விசாரணையில் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணத்தில் நடந்த கலவரத்தின்போது கன்னாதிட்டிச் சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டிற்குப் பலியான இனம் தெரியாத நபரின் மரணவிசாரணை யாழ். நீதிமன்ற நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் முன்னிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்த கலவரத்தின்போது பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டிற்கு இனம்தெரியாத நபர் ஒருவர் பலியானதும் இவர் பின் அடையாளம்காணப்படாத நிலையிலேயே அரசாங்கத்தினால் சடலம் புதைக்கப்பட்டதும் வாசகர்கள் அறிந்ததே.

யாழ். நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது. அங்கு சாட்சியமளித்த குமாரசாமி கந்தசாமி நீதவானின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கூறியதாவது.-

நீத. சம்பவம் நடந்த தினம் நீர் எங்கிருந்தீர்?

கந்தசாமி- கன்னாதிட்டியில் உள்ள எனது கடையில் இருந்தேன்.

நீத. அப்போது கடைகள் பூட்டப்பட்டிருந்தனவா? நீர் எங்கிருந்தீர்?

கந்தசாமி- ஆம் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. நான் எனது கடைவாசலில் நின்றேன்.

நீத: அப்போது அந்த இடத்திற்கு இ. போ. ச. பஸ் ஒன்று வந்ததா, அதில் ஆட்கள் இருந்தார்களா?

கந்தசாமி- ஆம்.

நீத: அந்த ஆட்களில் ஆயுதம் தாங்கிய பொலிஸாரும் இருந்தார்களா, எத்தனை பேர் இருந்தார்கள்?

கந்த- ஆம், இருவர் துவக்குடன் நின்றார்கள்.

நீத: அவர்களில் ஒருவர் உமக்கு முன் நின்றாரா, மற்றவர் எங்கு நின்றார்?

கந்த- ஒருவர் எனக்கு முன் நின்றார். மற்றவர் எரிந்த கடைக்கு முன் நின்றார்.

நீத: எவ்வளவு தூரத்தில் நின்றார்?

கந்த- சுமார் 10 யார் தூரத்தில்.

நீத: பின் என்ன நடந்தது?

கந்த- பஸ்ஸில் இருந்து இறங்கியவர்கள் கடையை உடைத்துக்கொண்டிருந்தார்கள்.

நீத: அடுத்து என்ன நடந்தது?

கந்த- ஏதோ ஒன்றை ஊற்றிக் கடைகளை எரித்தார்கள்.

நீத; எரித்தவர்கள் யார் என்று தெரியுமா?

கந்த- தெரியாது அவர்கள் சாரம் அணிந்திருந்ததுடன்சிங்களமும் பேசினார்கள்.

நீத: கடைகள் எரிக்கப்பட்டதும் என்ன நடந்தது?

கந்த. நாங்கள் தீயை அணைத்தோம். அப்போது பொலிஸார் அங்கு இருக்கவில்லை.

நீத: நீங்கள் தீயை அணைத்துக்கொண்டிருந்தபோது என்ன நடந்தது?

கந்த- பொலிஸ் வாகனம் ஒன்று வந்தது, அதனைக் கண்டதும் மக்கள் பயந்து ஓடத்தொடங்கினார்கள். எனது கடைக்கும் சிலர் ஓடிவந்தார்கள், எமக்கு முன்னும் சிலர் ஓடினார்கள், பொலிஸ்வாகனத்தில் வந்த பொலிஸாரில் ஒருவர் துவக்குடன் வந்து எனக்குக் குறிவைத்தார். நான் எனது இரண்டு கைகளையும் உயர்த்தியவாறு நின்றேன். பின்னர் அவர் திருப்பிச் சுட்டார்.

நீத: அப்போது இறந்தவர் எங்கு நின்றார்?

கந்த- இறந்தவர் ஆறுமுகம் என்பவரது வீட்டிற்குள் நின்றார், எனது கடையில் நின்று அவரைப் பார்க்கக்கூடியதாக இருந்தது. அவர் சுடப்படுவதைக் கண்டேன்.

நீத: அவர் சுடப்பட்டபோது சத்தம்கேட்டதா, எத்தனை தடவைகள் கேட்டது?

கந்த- மூன்று நான்கு தடவைகள் சூட்டுச் சத்தம் கேட்டது.

நீத: சுட்டவரைத் தெரியுமா? அவர்கள் என்ன உடை அணிந்திருந்தனர்?

கந்த- தெரியாது, அவர் பொலிஸ் உடை அணிந்திருந்தார்.

நீத: சுட்டவர் எங்கிருந்து சுட்டார்?

கந்த- எனது கடைக்கும் திரு ஆறுமுகத்தின் வீட்டிற்கும் இடையில் நின்றுசுட்டார்.

நீத: சூட்டுக்குப் பின் ஏதாவது சத்தம் கேட்டதா?

கந்த- ஆம் சுடுபட்டவர் அனுங்கும் சத்தம் கேட்டது.

நீதி: நீர் என்ன செய்தீர்?

கந்த- நான் காயப்பட்டவரைச் சென்று பார்த்தேன், அவர் விழுந்துகிடந்தார். அவரது உடலில் காயம் ஏற்பட்டிருந்தது.

நீதி; பின்னர் வேறு ஏதாவது வாகனம் வந்ததா? அதில் யார் வந்தார்கள்?

கந்த- ஆமிக்காரர்கள் பவுசருடன் அந்த இடத்திற்கு வந்தார்கள், யாராவது இவ்விடத்தில் சுடப்பட்டார்களா எனக் கேட்டார்கள்.

நீத: நீர் அவர்களை ஆறுமுகத்தின் வீட்டிற்கு அழைத்துச் சென்றீரா?

கந்த- ஆம்.

நீத: அவர்கள் என்ன செய்தார்கள்?

கந்த- அந்த உடலை அவர்கள் தூக்கிச்சென்றார்கள்.

நீத: இதுபற்றி நீர் பொலிஸில் முறைப்பாடு கொடுத்திரா! எப்போது கொடுத்தீர்?

கந்த- ஆம், சம்பவதினம் மாலை 5-30 மணி அளவில் கொடுத்தேன்.

நீத: சுடுபட்டு இறந்தவரை உமக்குத் தெரியுமா?

கந்த- தெரியாது.

நீத: அவரை இதற்கு முன் எங்காவது கண்டிருக்கிறீரா?

கந்த2 இல்லை.

நீத: முதல்வந்து சுட்டவர்கள் யாரென்று தெரியுமா? எதைக்கொண்டு அவர்கள் ஆமிக்காரர் இல்லை என அறிந்தீர்?

கந்த: ஆம், அவர்கள் பொலிஸ்காரர்கள், அவர்கள் பொலிஸ் யூனிபோம் அணிந்திருந்தார்கள்.

நீதி: சுட்டவர்கள் காக்கி உடையுடன் இருந்தார்கள். ஆமிக்காரருக்கும் காக்கியுடை தான் என்பதை அறிவீரா?

கந்: ஆம்.

நீதி: சுட்டவர்கள் பொலிஸ்காரர்கள்தான் என்று கூறு இதைத்தவிர வேறு ஏதாவது ஆதாரம் உண்டா?

(5-ம் பக்கம் பார்க்க)



சாந்தி
யாழ். நகர்
போன்; 7642
இன்று மட்டும்
தினசரி 10-30, 2-30, 6-30 9-45
ஃ சிவாஜி (மூன்று வேடங்கள்)
ஃ ஜெயலலிதா
தெய்வ மகன் (புதிய பிரதி)

மனோஹரா (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
தினசரி மு.ப. 10-30 பி.ப. 2-30 6-30, 9-45
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—ஜெயபிரபா அசோகன்
துணிவே துணை

லிடோ (யாழ்.நகர்)
போன்; 7693
தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
பணம் பந்தியிலே
அடுத்த வெளியீடு நீதிக்கு தலை வணங்கு

RIO (Jaffna)
Daily 10-30, a.m. 4-45, 7-00, 9-30 p.m.
OPERATION CROSS EAGLEs
(war Film)

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-00 p.m only
'SEXY SUSAN KNOWSHOW'
(Adults only Color)
From 7-10-77
The Great Barrier Reef

ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00 9-30
போன்; 7180
சிவாஜி-சாவித்திரி, ரங்கராவ்
நடித்த
எல்லாம் உனக்காக

நாளை முதல்
ஜெமினிகணேசன்—விஜயா
நடித்த
தசாவதாரம்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
அன்னக்கிளி

ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்


# "தொழிற்சங்கங்கள் அதிகாரிகளின் தூதுவரல்ல"

— ஆசிரியசங்கப் பிரமுகர்

யாழ்ப்பாணம், வியா; "தொழிற்சங்கங்கள் அதிகாரிகளுடைய தூதுவர்களல்ல. உறுப்பினர்களின் நல உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கவே அவை செயற்படவேண்டும். ஆயினும் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட எமது சங்க உறுப்பினர்களுக்கு மட்டுமன்றி எல்லா ஆசிரியர்களுக்கும் ஆசிரியரல்லா மற்றையோர்க்கும் எம்மாலான உதவிகளைச் செய்யவேண்டியது எமது கடமை. இச்சந்தர்ப்பத்தில் பல்வேறு வேறுபாடுகளைப் பாராட்டிக் கொண்டிருப்பது யதார்த்தத்தை அணுகுவதாகாது" என இலங்கை ஆசிரியர் சங்கப் பிரமுகர் ஜனாப் எம். ஐதுறாஸ் யாழ். மாவட்டக் கிளையின் செயற்குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

"குறித்த வன்செயல்களால் தாக்கப்பட்டவர்களும், உடைமைகளைப் பறிகொடுத்தவர்களும், இருப்பிடங்களை இழந்தவர்களும், மீண்டும் செல்வதாயின் வசிப்பிட வசதிகளோ உணவோ பெறமுடியாதவர்களுமான பல நூறு ஆசிரியர்கள் தாம் அச்சமற்ற சூழ்நிலையில் வாழ்வதற்கும் கடமையாற்றுவதற்குமாக இடமாற்றம்கோர உரிமையுடையவர்கள். அவர்களுடைய இடமாற்றங்கோரும் விண்ணப்பங்களை யதார்த்தபூர்வமாக ஆராய்ந்து நிவாரணம் வழங்கவேண்டியது அரசின் கடமையாகும்" என அவர் மேலும்குறிப்பிட்டு, இந்நிவாரணத்தை வழங்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் அரசினை வலியுறுத்தும் எனக் கூறினர்.

கல்வியமைச்சரையும் அதிகாரிகளையும் பேட்டிகண்டு இடமாற்றங்கோரும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதெனவும் பேட்டிகாணும்குழுவில் வ.மா. ஆ. ச. தலைவர் திரு. ச. கி. சுந்தரலிங்கம், செயலாளர் திரு. த. தேவராசா, முன்னை நாள் தலைவரும் பாதிக்கப்பட்டவரும் அநுரதபுர விவேகானந்த ம. வி. அதிபருமான திரு. வீ. சிவசுப்பிரமணியம் ஆகியோர் அங்கம்வகிக்கவேண்டும் எனவும் செயற்குழு தீர்மானித்தது. எடுக்கப்படும் நடவடிக்கைகள்பற்றிய விபரங்கள் சம்பந்தப்பட்டோருக்கு அறிவிக்கப்படவேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது.

இதுவரை கிடைக்கப்பெற்ற இடமாற்ற விண்ணப்பங்கள் நேற்றுக் கல்வி அமைச்சுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. செயலாளர் திரு. தேவராசா இவற்றை எடுத்துச் சென்றுள்ளார். (கெ-அ

## பொலிஸ்உடை அணிந்தவர்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கந்: இல்லை.

நீத: சூடு விழுகின்றபோது இறந்தவர் ஆறுமுகத்தின் வீட்டிற்குள் நின்றிருந்தாரா?

கந்த: ஆம்.

நீத: இறந்தவர் எங்கிருந்து அந்தக் காணிக்குள் வந்தார் என்று தெரியுமா?

கந்த; இல்லை.

நீத: சுடுபடு முன் அவரை அந்த இடத்தில் கண்டீரா?

கந்த: ஆம் நாங்கள் எரிந்த கடைகளை அணைத்துக் கொண்டிருந்தபோது அவரைக் கண்டேன்.

நீத: இச் சூட்டுச் சம்பவம் பற்றி அந்தப் பொலிஸ்காரருக்கு முறைப்பாடு கொடுத்தீர் எனத் தெரியுமா?

கந்த: தெரியும், சட்டநாதர் என்பவர் அவர்.

நீத: அவரை இதற்கு முன் தெரியுமா?

கந்த: தெரியும்.

அடுத்துச் சாட்சியமளித்த நீராவியடியைச் சேர்ந்த கந்தையா சிவலிங்கம் நீதவானின் கேள்விகட்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:-

நீத: சம்பவதினம் நீர் சிவன் கோவிலடிக்குப் போனீர்?

சிவ: ஆம்.

நீத: அங்கு என்ன கண்டீர்?

சிவ; கடைகள் எரிவதைக் கண்டேன்.

நீத; தீயினை அணைக்க முற்பட்டீரா?

சிவ: ஆம்.

நீத: அப்போது பொலிசார் துவக்குடன் வருவதைக் கண்டீரா?

சிவ: ஆம்.

நீத: மக்கள் ஓடினார்களா?

சிவ: ஆம்.

நீதி: நீரும் ஓடினீரா?

சிவ: ஆம்.

நீத: ஓடும்போது என்ன கண்டீர்?

சிவ: நான் ஓடிச்சென்று ஆறுமுகத்தின் சுவரால் குதித்து யாழ்மெட்டல் காணிக்குள் ஓடினேன். அப்படி ஆறுமுகத்தின் சுவரில் ஏறியபோது ஒரு பொலிஸ்காரர் ஆறுமுகத்தின் வளவு வாசலில் நின்று வளவுக்குள் சுடுவதைக் கண்டேன்.

நீத: சுட்டபோது என்ன நடந்தது?

சிவ: ஒருவர் சுடுபட்டு விழுவதைக் கண்டேன்.

நீத: சுட்டவர் பொலிஸ்காரர் என எப்படித் தெரியும்?

சிவ: அவர் யூனிபோம் அணிந்திருந்தார்.

நீத: அவர் நம்பர் அணிந்திருந்தாரா?

சிவ: அவர் நம்பர் அணிந்திருந்தார் ஆனால் என்னால் அதை அவதானிக்க முடியவில்லை.

நீத: வேறு அடையாளம் தெரியுமா?

சிவ: அவர்கள் பொலிஸ் தொப்பி அணிந்திருந்தார்கள்.

நீத: சி.ரி. பி. பஸ் வந்ததைக் கண்டீரா?

சிவ: இல்லை.

நீத: இறந்தவர் யார் என்று தெரியுமா?

சிவ: தெரியாது.

அடுத்த சாட்சியான கிருஷ்ணசாமி வைத்தீஸ்வரன் தனது சாட்சியத்தில் நான் எனது நண்பர் ஒருவரின் வீட்டிலிருந்தபோது நீல நிற பொலிஸ் வான் ஒன்று வருவதைக் கண்டேன். அவர்கள் பொலிஸ் யூனிபோமும் தொப்பியும் அணிந்திருந்தார்கள். வானிலிருந்து இறங்கிய இரு பொலிசார் இறங்கியதும் மக்களை நோக்கிச் சுட்டார்கள் முதல் இருசூடுகள் கேட்டது உடன் நான் பொலிசார் சுடுகிறார்கள் என்று சத்தமிட்டுக் கொண்டே அங்கிருந்த மக்களை அவ்விடத்திலிருந்து செல்லுமாறு கூறியபடி வீட்டிற்கு ஓடினேன் வீட்டிலிருந்து நான் பார்த்தபோது ஒரு பொலிஸ் அதிகாரி ஸ்ரீ குமார விலாசுக்கு முன்னால் நின்ற சைக்கிளை எடுப்பதைக்கண்டேன் பின்னர் அந்தச் சைக்கிள் சேதப்படும் சத்தம் கேட்டது எனக் கூறினார்.

இறந்தவரின் உடலைப் பரிசோதனையிட்ட யாழ். வைத்திய அதிகாரி திரு. சுப்பிரமணியம் துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட மரணமெனத் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம் மரண விசாரணையின் ஒருபகுதி செவ்வாயன்று வெளிவந்திருந்தது. (கா)

## இந்து நாகரிகம் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன் இலங்கைப் பல்கலைக் கழகம் யாழ். வளாகத்தின் இந்து நாகரிக பட்டப்பின் டிப்ளோமாப் பரீட்சை (Postgkaduate diploma examination) யின் பெறுபேறுகள் வெளிவந்துள்ளன.

இப்பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:-

செல்வி ஜி. எஸ். அரசரத்தினம், திருமதி எம். கனகசபாநாதன், செல்வி எஸ். கோபாலபிள்ளை, செல்வி எல். கனகசபாபதி, திருமதி எஸ். எஸ். குமாரசாமி, திரு. எஸ். ஆர். குமரேசன், செல்வி வி. முத்தையா, திருமதி பி. நடேசன், திரு. எம். பவானந்தன், திரு. எம். ராஜரத்தினம், திருமதி வி. ரத்தினவேல், செல்வி ஏ. சரோஜாதேவி, திரு. ரி. செல்லத்துரை, செல்வி சி. சிற்றம்பலம், செல்வி பி. சொக்கலிங்கம், செல்வி ஜே. சுந்தரமூர்த்தி, திரு. எஸ். தேவதாஸன் திரு. கே. திருநாவுக்கரசு, திரு. வி. உமாபதிசிவம், செல்வி பி. விநாயகமூர்த்தி, திரு. எஸ். விநாயகமூர்த்தி, திரு ஜி. சிவசம்பு (சமஸ்கிருதத்தில் நூனசித்தி)

இம்முடிவுகள் பல்கலைக்கழக செனட்டினால் உறுதிப்படுத்தப்படல்வேண்டும்.


பூலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி பி. ப. 2-30, 7-00
சிவாஜி ஜமுனா
மருதநாட்டு வீரன்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45 10-00
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
பூம்புகார்


## 'இவர்கள்' மீது கண்காணிப்பு

கொழும்பு, புதன் கொழும்பிலுள்ள 140 ஐ. ஆர் சிக்காரர்கள்மீது பொலிசார் தீவிர கண்காணிப்பு செய்து வருகின்றனர்.

இவர்களுக்கென பொலிசார் விசேட 'பைல்'களை ஆரம்பித்து அவர்களது நாளாந்தநடவடிக்கைகளைப் பதிவுசெய்துவருகின்றனர்.

வீகாரை லேன், கிருலப்பனை, வெள்ளவத்தை, புறக்கோட்டை ஆகிய இடங்களிலேயே இந்த ஐ.ஆர். சிக்கள் முகாமிட்டுள்ளனர் என்று பொலிசார் தெரிவித்தனர்.

## கூட்டம் இன்று நடவாது

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள வர்த்தகர்களின் ஆலோசனைக் கூட்டம் தொழிற்பிரமுகர் வேலாயுத பிள்ளையின் பாரியார் மறைவை யொட்டி இன்று நடைபெறமாட்டாது என்றும் இக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மாலை வாக்கர்ஸ் அன்சன்ஸ் ஸ்தாபனத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

**மணிவாக்கு**

மனிதர்களை நெம்பிக் கிளப்பிவிட இரண்டு விசைகள் இருக்கின்றன ஒன்று ஆசை; மற்றது அச்சம்.

— நெப்போலியன்.


# ஈழநாடு

The Eelanaadu


## வேலை வாய்ப்பு

வழமையான அமைதி நிலைமைக்கு நாடு இப்பொழுது திரும்பிக்கொண்டிருக்கின்றது.

நாட்டின் பொதுவான பிரச்னைகள் இன்னமும் அப்படியேதான் இருந்துவருகின்றன. போதாக் குறைக்கு சமீபத்திய கலவரங்களினால் எழுந்த புதிய பிரச்னைகளுக்கும் முகம்கொடுக்க நேர்ந்துள்ளது.

தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை ஐக்கிய தேசிய கட்சி அரசு படிப்படியாக நிறைவேற்றத் தொடங்கியிருக்கின்றது.

இதன் ஒரு முக்கிய அம்சமே அரசியல் சட்டத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ள திருத்தமாகும்.

இத்திருத்தப் பிரேரணை மீதான விவாதத்தின்மீது பேரவையில் பேசிய உள்ளூராட்சி பொதுநிர்வாகத் துறை அமைச்சர் திரு. ஆர். பிரேமதாஸ இந்தநாட்டில் 12 லட்சம் பேர் வேலையற்றிருப்பதாகக் குறிப்பிட்டார்.

அரசியல் சட்டத் திருத்தத்தின் அவசியத்தை வற்புறுத்துவதற்கான தமது ஆணித்தரமான கருத்துகளுக்கிடையில் இதனைப் பேச்சுவாக்கிலேயே அமைச்சர் குறிப்பிட்டார். என்றாலும் நாட்டின் இன்றைய நிலைமைக்கும் அது எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளுக்கும் இந்த வேலையில்லாப்பிரச்னை மூலகாரணங்களில் ஒன்று எனச் சொன்னால் மிகையன்று.

நாட்டின் எல்லாப்பிரிவினரையுமே இந்த வேலையில்லாப் பிரச்னை வாட்டிவருகின்றது. இப்பொழுது 12 லட்சம் பேர் வேலையில்லாதிருந்தால், இன்னும் சில காலத்தில் இது மேலும் பல ஆயிரக்கணக்கில் அதிகரிக்கலாம். எனவே இதுபற்றி பேச்சளவில் நின்றுவிடாமல் ஆக்கபூர்வமான நடவடிக்கையில் இறங்கவேண்டியது அவசியம்

நாட்டில் பெரும் எடுப்பில் கொள்ளைகளும், சூறையாடல்களும், வழிப்பறிகளும் இடம்பெறுவதற்கும் கூட இந்த வேலையில்லாமையே காரணம் எனலாம். வேலையற்றிருப்பவர்கள் 'ஏதாகிலும் ஒன்றைச் செய்வோம்' என்ற போக்கில்இம் மாதிரிக் காரியங்களில் இறங்குகிறார்கள். பிச்சைக்காரர் அதிகரித்திருப்பதற்கும் கூட இது ஒரு காரணமே!

"வேலையின்றி சோம்பிக் கிடப்பவனின் உள்ளம் பைசாசத்தின் வேலைத்தலமாக மாறிவிடுகிறது" என்பது மேலைநாட்டுப் பழமொழியாகும்.

எனவேதான் சமுதாயத்தின் எல்லாநிலைகளிலும் இந்தப்பிரச்னையை முழுமையாக அணுகித்தீர்த்துக்கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

10 லட்சம் பேருக்கு அரசுத் துறையில் வேலைவாய்ப்பளிப்பதுபற்றி அரசு ஆராய்ந்துவருவதாக அண்மையில் திரு. பிரேமதாஸ ஒரு கூட்டத்தில் அறிவித்திருந்தார். இதனை எவ்வாறு அரசு நிறைவேற்றப்போகின்றது என்பது இன்னும் தெளிவாக இல்லை.

இப்பிரச்னைக்கு எவ்வளவு விரைவில் தீர்வு காணப்படுகின்றதோ அவ்வளவு விரைவில் ஏனைய பிரச்னைகளையும் அணுகஇதுஉதவியாய் இருக்கும் என்று கருதலாம்.

---

தேசியஅரசு பேரவையில்

# மக்களின் ஆணையை நாம் நிறைவேற்றியே தீருவோம்!

— அ. அமிர்தலிங்கம்

கொழும்பு, புதன்

"வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கமைய தமிழ் மக்களுக்கென சுதந்திர தமிழ் ஈழம் ஒன்றை அமைப்பதற்கான ஆணையை தமிழ் மக்கள் எங்களுக்கு கடந்த தேர்தலின்போது அளித்துள்ளனர். இந்த மக்கள் ஆணையை கைவிட்டுவிட்டு நாம் ஒருபோதும் ஓடமாட்டோம். மக்கள் ஆணையை நாம் கடவுளின் கிருபையால் நிறைவேற்றியே தீருவோம்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று தேசிய அரசுப் பேரவையில் கூறினார்.

அரசியல் அமைப்புத் திருத்த மசோதா மீதான விவாதத்தில் தமிழர் கூட்டணி நிலை பற்றி தேசியஅரசுப் பேரவையில் எடுத்துக் கூறியபோதே திரு. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"காலஞ்சென்ற மூதறிஞர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தினால் முதன்முதலில் கொண்டுவரப்பட்ட 'தமிழ் ஈழ'க் கொள்கையின் அடிப்படையிலேயே தமிழர்கூட்டணி எம். பிக்களாகிய நாம் இப் பேரவைக்கு வந்துள்ளோம். எனவே தமிழ்மக்களின் விடுதலைக்காக உழைப்பதே எமது முக்கிய நோக்கம். இப்பணியிலிருந்து நாம் இம்மியளவும் விலகமாட்டோம்.

### ஒரு மாதத்தில் கொலை, கொள்ளை

இந்த நாட்டில் தமிழ்மக்கள் எந்தவித உரிமையும் இன்றி வாழ்கிறார்கள். இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த ஒரு மாத காலத்திற்குள்ளேயே பல தமிழ்மக்கள் கொலை செய்யப்பட்டு, கற்பழிக்கப்பட்டு அவர்களின் உடமைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன."

### அமைச்சர் குறுக்கீடு

இக்கட்டத்தில் குறுக்கிட்ட தொழில் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ, திரு. அமிர்தலிங்கம் அரசியல் அமைப்பு திருத்தத்தில் தமது கட்சி கலந்துகொள்ளாது விடுவதற்கான காரணங்கள் பற்றிக் கூறாது வேறு விடயங்களைப் பேசுகிறார் என்று குற்றம் சாட்டினார்.

அப்போது சபாநாயகர் வேறு விடயங்களை விடுத்து அரசியல் அமைப்பு திருத்த விவாதம் பற்றிக் குறிப்பிடுங்கள் என்று கூறினார்.

அதற்குப் பதில் அளித்த திரு. அமிர்தலிங்கம் விவாதத்தில் கலந்துகொள்ளாதற்கான காரணங்களையே இங்கே கூறுகிறேன். அதைச் சொல்வதற்காகவே மேற்கண்ட விபரங்களைக் கூறுகிறேன் என்றார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இந்நாட்டை பிரதமர் ஆண்டால் என்ன ஜனாதிபதி ஆண்டால் என்ன என்பதில் தமிழ்மக்களுக்கு அக்கறை கிடையாது. அவர்களுக்கு வேண்டியது அவர்களது உரிமைகளே.

"வீடு எரியும்போது அவ்வீட்டின் கதவுத்திரை நீலமா சிவப்பா என்று கருதுவதில் எதுவித அர்த்தமுமில்லை. அந்த நிலையிலும் தமிழ்மக்கள் இல்லை.

"எனவே உலக மக்களுக்கும் நாட்டு மக்களுக்கும் எமது நிலையை எடுத்துக் காட்ட இந்த விவாதத்தில் நாம் கலந்துகொள்ளவில்லை" என்று திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

(ம-இ)

---

# நாடு பிளவுபடுவதை கிழக்கு மக்கள் அனுமதிக்கமாட்டார்கள்

— நீதி அமைச்சர் தேவநாயகம்

கொழும்பு, புதன்

"இந்த நாட்டைப் பிரிப்பதற்கு கிழக்கு மாகாண மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்."

இவ்வாறு நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் நேற்று தேசிய அரசுப் பேரவையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"வடக்கு, கிழக்கு மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி நாட்டைப் பிரிப்பதற்கு அனுமதி அளித்துள்ளதாக கூட்டணியினர் கூறுகிறார்கள். தனிநாடு அமைப்பதற்கு கிழக்கு மாகாண மக்கள் ஆணையிடவில்லை.

"மட்டக்களப்புப் பகுதியில் 3 கூட்டணி உறுப்பினர்கள் இருந்தபோதிலும் இரண்டு பேரே கூட்டணியின் உத்தியோகபூர்வமான எம். பிக்களாவர்.

### ராஜதுரைக்கு சொந்த செல்வாக்கு

"மட்டக்களப்பு தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற திரு. செ. ராஜதுரைக்கு அவரது செல்வாக்கின் மூலமே வெற்றி கிடைத்தது. ஆனால் அதேவேளையில் மட்டக்களப்பு தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட திரு. காசி ஆனந்தன் கடந்த தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார்.

"எனவே இங்கு பொத்துவில் பட்டிருப்பு ஆகிய இரு தொகுதிகளில்மட்டுமே தமிழர் கூட்டணியினரின் 'தமிழ் ஈழ' கொள்கைக்கு ஆதரவு கிடைத்துள்ளது.

"தமது தனிநாட்டுக் கொள்கையை தமிழர் கூட்டணி வடக்கு மாகாணத்துடனேயே வைத்திருக்கட்டும்."

(ம-இ)

---

## வடபகுதி புகையிரத சேவை யோக்குவரத்தாளர் புகார்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கைப் புகையிரதப் பகுதி வடபிராந்திய சேவை குறித்துப் புகார்க் கடிதம் ஒன்றை வட இலங்கைப் போக்குவரத்தாளர் சங்கம் அமைச்சருக்கும், புகையிரதப் பொதுமுகாமையாளருக்கும், அநுராதபுரம் கட்டுப்பாட்டதிகாரிக்கும் அனுப்பிவைத்துளது.

காங்கேசன்துறைப் புகையிரத நிலையத்திலிருந்து காலை 7 மணிக்குப் புறப்பட்டு 7-40க்கு வரும் கொழும்பு புகையிரதமும் காலை 8மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு 8-30 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடையும் புகையிரதமும் சுமார் 1 மணித்தியாலத்துக்கு மேலாகத் தாமதித்தே வருகின்றன. காலை 7-40க்கு யாழ்ப்பாணம் வரவேண்டிய முதலாவது புகையிரதம் 9-15 மணிக்கே யாழ்ப்பாணம் வந்தடைகின்றது. இதனால் யாழ்ப்பாணம் வரும் அரசாங்க, கூட்டுஸ்தாபன, தனியார்துறை ஊழியர்கள் வேலைக்கு தாமதமாகவே வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலுள்ளது. இதனால் தொழிலாளர்களும், பிரயாணிகளும் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

இதனால் மேற்படி சங்கம் 7 மணிக்குப் புறப்படும் கொழும்புப் புகையிரதத்தை 8 மணிக்கு அனுப்பும்படியும் 7-30 மணிக்குப் புறப்படும் குறுகிய தூர புகையிரதத்தை 7 மணிக்கு அனுப்பும்படியும் கோரியதை அடுத்து இரண்டு மூன்று தினங்கள் இம்முறை கையாளப்பட்டதென்றும் பின்னர் இது நிறுத்தப்பட்டுள்ளது என்றும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பெரும் இன்னல்களுக்குள்ளாவதாலேயே மேற்படி புகார்க் கடிதத்தினை, வட இலங்கைப் போக்குவரத்தாளர் சங்கத் தனாதிகாரி திரு. சத்தியானந்தனும், கட்டிடத் திணைக்களத்தைச் சேர்ந்த ரத்தினராசாவும் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பியிருப்பதாக அறிவித்துள்ளனர்.

(கா)

---

## உரும்பராய் கல்வி வளர்ச்சிக்கு உழைத்தவர்



உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் பத்தாண்டுகளாக விஞ்ஞானகூடம் இல்லாத பெருங்குறையைப் போக்க முன்வந்தார் உரும்பராயைப் பிறப்பிடமாகவும், கோலாலம்பூரை வதிவிடமாகவும்கொண்ட தம்பு குமாரசாமி அவர்கள். நவீன வசதிகளுடன் நிறுவப்பட்ட இவ் விஞ்ஞான கூடத்தில் ஊர்ப் பிள்ளைகள் பல நூற்றுக்கணக்காக வருடாவருடம் விஞ்ஞானக் கல்வி கற்று முன்னேறுவது கண்டு, மனப்பூரிப்பு அடைந்த திரு குமாரசாமி, மேலும் விஞ்ஞான கூடத்தை விஸ்தரிக்க முன்வந்தார் வித்தியாலய வைரவிழாவின் முதற் சிறப்பம்சமாக விஞ்ஞானகூட விஸ்தரிப்புக்கான கட்டடத்துக்கு. கற்பகவிநாயகர் திருவடிகளை மனத்திருத்தி சென்ற ஏப்ரல் மாதம் 7ம் தேதி அத்திபாரக்கல்லை நாட்டியதுடன் வைரவிழா மலர்ப் பிரதியையும் பெற்றுச் சிறப்பித்தார்.

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலய விஞ்ஞானக் கல்விக்கு வித்திட்டவர் திரு. குமாரசாமி என்றால் மிகையாகாது. இவ்வித்தியாலயத் மட்டுமன்றி வேறும் பொதுஸ்தாபனங்களுக்கும் இவர் செய்த தர்மங்கள் பல.

திரு. தம்பு குமாரசாமி உரும்பராயில் பிறந்து புகழுடம்பு எய்தினாலும், மலேசியாவிலேயே பூதவுடல் எய்தினார். அன்னாரின் ஆன்மா சாந்தி பெறுக!

அ. பஞ்சாட்சரம்.

---

## பிணையில் அல்ல

கைதுசெய்யப்பட்ட திருமதி இந்திரா காந்தி நீதிமன்றத்தினால் நிபந்தனை எதுவும் இன்றியே விடுதலை செய்யப்பட்டார். 'இந்திரா பிணையில் விடுதலை' செய்யப்பட்டார் என்று ஈழநாட்டில் தவறாக வெளியிடப்பட்டதற்கு வருந்துகிறோம்.

(ஆ-ர்)

---

## மரண அறிவித்தல்

### கந்தசாமி குலரத்தினம்

மன்னார் கலால் பகுதிப் பொறுப்பதிகாரி கந்தசாமி குலரத்தினம் காலமாகிவிட்டார். இவர் கனகாம்பிகையின் அன்புக் கணவரும், ரமணன், தனஞ்செயன், பவானி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் (6-10-77) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வட்டுக்கோட்டை சங்கரத்தையில் நடைபெறும். 7318

---


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News papes in Sri Lanka.